**சுருக்கம்**

பேரிடர் மேலாண்மைச் சட்டம் 2005 – தொல்லியல் அகழ்வைப்பகங்கள் (Archaeology) செயல்பட அனுமதி – நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் (SOP) – வெளியிடப்படுகிறது .

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (பே.மே 4)த்துறை**

**அரசாணை (நிலை) எண். 749** **நாள் 09.12.2020**

**சார்வரி, கார்த்திகை 24**
**திருவள்ளுவராண்டு 2051**
படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.613, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (பே.மே.4)த்துறை நாள் 31.10.2020
2. அரசாணை (நிலை) எண்.626, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (பே.மே.4)த்துறை நாள் 09.11.2020

*** *** ***

**ஆணை:-**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் அரசு அருங்காட்சியங்களை திறப்பதற்கு அனுமதி அளித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் அரசு அருங்காட்சியங்களை திறப்பதற்கு வழிகாட்டி நெறிமுறைகள் (Standard Operating Proceudres) வெளியிடப்பட்டுள்ளன.

2. முதன்மைச் செயலாளர்/ ஆணையர் தொல்லியியல்த்துறை அவர்கள் கோவிட்–19 பரவுதலை தடுக்கும் நோக்கில் 17.3.2020 முதல் மூடிவைக்கப்பட்டுள்ள தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் 14 தொல்லியல் அகழ்வைப்பகங்கள் மற்றும் உலகத் தமிழ்ச் சங்க வளாகத்தில் நடைபெற்று வரும் கீழடி கண்காட்சி வளாகத்தினை மீண்டும் திறக்க வேண்டி வழிகாட்டு நெறிமுறைகளை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

3. தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் 14 தொல்லியல் அகழ்வைப்பகங்கள்,மனோரா நினைவுச் சின்னம் மற்றும் மதுரை உலகத் தமிழ்ச் சங்க வளாகத்தில் நடைபெற்று வரும் கீழடி கண்காட்சி வளாகத்தினை மீண்டும் திறப்பதற்கான கோவிட்–19 நோய்தொற்று பரவலை தடுக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை (SOP) இணைப்பில் உள்ளவாறு அரசு வெளியிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க. சண்முகம்**
**அரசு தலைமைச் செயலாளர்.**

பெறுநர்
கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர்,
சென்னை 600 005

கூடுதல் தலைமைச் செயலாளர், சுற்றுலா பண்பாடு மற்றும்
அறநிலையத்துறை, சென்னை 09
முதன்மைச் செயலாளர்/ஆணையர், தொல்லியல் துறை, சென்னை 08
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை 9
முதுநிலை தனிச் செயலாளர், தலைமைச்செயலாளர் அலுவலகம், சென்னை 9

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

9/12/2020

பிரிவு அலுவலர்

## இணைப்பு

## தொல்லியல் அகழ்வைப்பகங்களில் பின்பற்றப்படும் நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் (Standard Operating Procedure)

1. நோய் தொற்று அதிகமாக இருக்கும் கட்டுப்பாட்டு மண்டலங்களில் உள்ள அகழ்வைப்பகங்கள் மூடப்பட்டிருக்கும். கட்டுப்பாட்டு மண்டலத்திற்கு வெளியே உள்ள அகழ் வைப்பகங்களைத் திறக்கலாம்.

2. சமூக இடைவெளி **6** அடி தூரம் எனக் கருத்தில் கொண்டு ஒரு மணி நேரத்திற்கு பார்வையாளர்களின் எண்ணிக்கையை முடிவு செய்ய வேண்டும்.

   **2A 65** வயதுக்கு மேற்பட்டவர்கள், மாற்றுத் திறனாளிகள், கர்ப்பிணி பெண்கள் மற்றும் **10** வயதுக்கு கீழ் உள்ள குழந்தைகள் அகழ்வைப்பகங்களைப் பார்வையிட அனுமதிக்கக் கூடாது.

3. சமூக இடைவெளியுடன் உட்காருவதற்கு ஏதுவாக இருக்கைகளுடன் கூடிய காத்திருப்பு அறைகள், குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகளுடன் இருத்தல் வேண்டும்.

4. சமூக இடைவெளியைக் கருத்தில் கொண்டு, பார்வையாளர்கள் வரிசையில் இடைவெளி விட்டு நிற்பதற்கு ஏதுவாக கட்டம் குறித்தல் வேண்டும்.

5. அகழ்வைப்பகங்களுக்குள் பார்வையாளர்கள் நுழைவதற்கும், வெளியே வருவதற்கும் தனித்தனி பாதை அமைத்திட வேண்டும்.

6. அகழ்வைப்பகங்களுக்குள் பார்வையாளர்கள் நுழையுமுன், கைகளைக் கழுவுவதற்கு சோப் மற்றும் தண்ணீர் வசதி அமைத்துக் கொடுத்தல் அவசியம்.

7. அகழ்வைப்பகத்தின் நுழைவு வாயிலில் கைகளை சுத்தம் செய்வதற்காக **Sanitizer dispenser** மற்றும் உடலின் தட்ப வெப்பத்தை அறிய **Thermal Screening** கருவியினை வைக்க வேண்டும்.

**7-A** அடிக்கடி சோப்பு கொண்டு கை கழுவுதல் அவசியம். (40–60 வினாடிகளுக்கு) ஆல்கஹால் கொண்டு தயாரிக்கப்பட்ட திரவத்தைக் கொண்டும் கைகளை சுத்தப்படுத்திக் கொள்ளலாம்.

8. நோய் அறிகுறி உள்ளவர்களை அகழ்வைப்பகங்களுக்குள் அனுமதித்தல் கூடாது. நோய் அறிகுறி இல்லாதவர்களை அனுமதித்தல் அவசியம்.

9. அகழ்வைப்பகங்களில் நுழைவுச் சீட்டு வழங்கும் போது ஆறு அடி இடைவெளியைக் கடைபிடித்தல் வேண்டும். தனி நபர்கள் பிறரை வணங்கும் போது கை குலுக்காமல் கை கூப்புமாறு கேட்டுக் கொள்ளலாம்..

10. முகக் கவசம் கட்டாயம் அணிதல் வேண்டும். முகக் கவசம் அணியாதவர்களை அகழ்வைப்பகங்களுக்குள் அனுமதிக்க வேண்டாம்.

**10A)** இருமல்/தும்மல் வரும்போது கைக்குட்டை, டிஷ்யூ பேப்பர் அல்லது முழங்கையைக் கொண்டு வாய் மற்றும் மூக்கினை மூடிக் கொள்ள வேண்டும்.

11. வாகனங்களை நிறுத்தும் இடங்களில் சமூக இடைவெளியைக் கருத்தில் கொண்டு மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்துதல் அவசியம்.

12. அகழ்வைப்பகங்ளில் **Covid-19** தடுப்பு முறை குறித்தான பலகைகள் இடம் பெறுதல் வேண்டும். இது குறித்தான ஒலி–ஒளிப் பதிவுகளைப் பதிவிடுதல் வேண்டும்.

13. அகழ்வைப்பகங்களுக்குள் எந்த இடத்திலும் எச்சில் துப்பக் கூடாது.

14. அகழ்வைப்பகங்களில் உள்ளே மற்றும் வெளியே உள்ள கடைகள், தேநீர் குடிக்கும் இடங்களில் சமூக இடைவெளி இன்றியமையாதது.

15. அகழ்வைப்பகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பொருட்களைப் பார்வை யாளர்கள் தொடுவதற்கு அனுமதிக்கக் கூடாது.

16. கைகழுவுமிடம் மற்றும் கழிவறை ஆகியவற்றில் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

17. அகழ்வைப்பகங்களில் தரை மற்றும் சுற்றுப் புறத்தை அடிக்கடி சுத்தம் செய்தல் வேண்டும்.

18. பார்வையாளர்கள் மற்றும் அலுவலர்கள் ஆகியோர் விட்டுச் சென்ற முகக் கவசம், முக உறை மற்றும் கிளவுஸ் ஆகியவற்றை முறையாக அகற்றுதல் பணி உறுதிப்படுத்தப்படும்.

19. உடல் நலத்தை அவரவர்கள் கண்காணித்தல் அவசியம். நோய் ஏதும் ஏற்பட்டால் மாநில அல்லது மாவட்ட சேவை மையத்தை தொடர்பு கொள்ள வேண்டும்.

20. வளாகத்திற்குள் சந்தேகத்திற்குரிய (அ) உறுதிப்படுத்தப்பட்ட நோய் அறிகுறி ஏற்பட்டால்.

a) உடல் நலக் குறைவுள்ள நபர் தனியான அறை/இருப்பிடத்தில் தனிமைப்படுத்தப்படுவர்

b) மருத்துவர் சோதனை செய்யும் முன் உரிய முகக் கவசம் /முக உறை அளிக்கப்படும்.

c) உடனடியாக அருகில் உள்ள மருத்துவ வசதி கொண்ட மருத்துவமனைக்கு தெரிவித்தல் (அ) மாவட்ட (அ) மாநில உதவி எண்ணிற்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

d) உரிய பொது நல பொறுப்பாணையம் மூலம் நோயின் வீரியத்தை அளவிடுதல் மேற்கொள்ளப்படும். மேலும் பாதிக்கப்பட்ட நபரின் விவரம் அறிதல், நோய் தடுப்பு செயல்முறைகள் தொடர்பாக மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்.

e) நபர் +ve என்று அறியப்பட்டால், பூச்சி கொல்லி நோய் தடுப்பு செயல்முறை அகழ்வைப்பக வளாகத்தில் செய்யப்படும்.

21. கண்காணிப்பு கேமிராக்கள் அனைத்து முக்கிய இடங்களிலும் நிறுவப்படும்.

22. அரசால் வரையறுக்கப்பட்ட செயல்முறைகளின்படி, கோவிட்–19 பாதுகாப்பு கூட்டமைப்பு அமைக்கப்பட்டு, தொல்லியல் அகழ்வைப்பகங்கள் கண்காணிக்கப்படும்.

23. 100 சதுர மீட்டர் (அ) 1075 சதுர அடி பகுதியில் 20 நபருக்கு மேல் பார்வையாளர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்.

24. அகழ்வைப்பக வளாகத்திற்குள்ளும், சுற்றியும், 1% சோடியம் ஹைபோகுளோரைட் திரவம் மூன்று மணி நேரத்திற்கு ஒரு முறை தெளிக்கப்படும்.

க. சண்முகம்
அரசு தலைமைச் செயலாளர்.

/உண்மை நகல்/

9/12/2020

பிரிவு அலுவலர்